

Madurai Symposium 2007
Advancing Development
Building Alliances
24-29 September



செய்தியறிக்கை

செப்டம்பர் 28, 2007

## 'நவீன தொழிற்படிப்புகள் கிராமங்களைச் சென்றடைய வேண்டும்'
### -கருத்தரங்கில் வலியுறுத்தல்

மதுரை கூடலரங்கம் 2007 நிகழ்வில் இன்று 'வாழ்வாதார மேம்பாட்டிற்கான தொழிற்கல்வி' என்ற தலைப்பில் கருத்தரங்கு நடைபெற்றது. இதில் கலந்து கொண்டு தலைமை உரையாற்றிய தமிழ்நாடு பாலிடெக்னிக் கல்லூரியின் முதல்வர் உமையாள், 'தொழிற்பயிற்சி பெறுகின்ற இடத்திலேயே வளாக நேர்காணல் மூலமாக பல்வேறு நிறுவனங்களுக்கு மாணவர்கள் தேர்வு பெறும் வாய்ப்பு தற்போது பெருகி வருகிறது. ஆகையால் மாணவர்கள் துறை சார்ந்த அறிவை விரிவுபடுத்திக் கொள்வது மிகவும் அவசியம். பயிற்சியினை வழங்கும் நிறுவனங்கள் வேலைவாய்ப்பிற்கு உறுதியளிக்கின்ற அதே சமயத்தில் நிறுவனங்களுக்குத் தேவையாக இருக்கின்ற பயிற்சிகளையே வழங்க வேண்டும்' என்றார். ரூட்செட் நிறுவனத்தின் இணை இயக்குநர் இராமலிங்கம் பேசுகையில், 'கிராமப்புற மாணவர்களின் அறிவுத் திறனை சிறப்பிற்குரிய வகையில் செழுமைப்படுத்துவது என்பது தொழிற்கல்வி நிலையங்களின் தலையாய கடமையாகும். இதன் மூலம் போட்டி நிறைந்த இவ்வுலகில் அவர்களுக்கான வேலை வாய்ப்பினை உறுதிப்படுத்த இயலும்' என்றார். மதுரை மக்கள் கல்வி நிறுவனத்தின் இயக்குநர் (பொறுப்பு) அஞ்சுகம் பேசுகையில், 'வழங்கப்படும் பயிற்சிகள் அனைத்தும் நவீன தொழில் நுட்பத்துடன் போட்டியிடும் வகையில் இருக்க வேண்டும். புதிய பயிற்சிகள் கிராமங்களை நோக்கிப் பயணிக்க வேண்டும்' என்றார்.

திருவேட்டை அய்யனார் டெக்ஸ்டைல்ஸ் மில்லின் தலைவர் இராஜேந்திரன் பேசும்போது, 'கிராமப்புற சமுதாயக் கூடங்கள் தொழிற் பயிற்சிக் கூடங்களாக மாறும்போது, தொழில் நிறுவனங்களின் கூடுதல் ஒத்துழைப்பைப் பெற முடியும். பயிற்சி வழங்கும் நிறுவனங்கள் குறிப்பிட்ட தொழில் நிறுவனங்களோடு புரிந்துணர்வு ஒப்பந்தத்தை ஏற்படுத்திக் கொள்வதன் மூலம் பயிற்சி பெறும் மாணவர்களின் வேலைவாய்ப்பிற்கும், வாழ்வாதார மேம்பாட்டிற்கும் உறுதியளிக்க இயலும்' என்றார். டி.வி.எஸ்.கல்வியியல் ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு மையத்தின் ஒருங்கிணைப்பாளர் பாலாஜி, தியாகம் பெண்கள் அறக்கட்டளையின் தலைவர் அமுதசாந்தி, மதுரை ஐ.டி.ஐ.யின் முதல்வர் முத்துவீரா ஆகியோர் கருத்தரங்கில் கலந்து கொண்டு பல்வேறு கருத்துக்களைப் பகிர்ந்து கொண்டனர்.

மக்கள் கல்வி நிலைய ஒருங்கிணைப்பாளர் நாகேஸ்வரி அனைவரையும் வரவேற்றார். கருத்தரங்கின் நோக்கம் குறித்து தானம் மக்கள் கல்வி நிலையத்தின ஒருங்கிணைப்பாளர் காயத்ரி பேசினார். தானம் தொழிற்கல்வி நிலையத்தின் பயிற்சியாளர் தீபா நன்றி தெரிவித்தார். தொடர்ந்து பங்கேற்பாளர்கள் அனைவரும் சிறு குழுக்களாகப் பிரிந்து தொழிற்கல்விக்கான வேலை வாய்ப்புகள், எதிர் கொள்ளும் சவால்கள், செயல்பாட்டு வழிமுறைகள் ஆகியவை குறித்து கலந்துரையாடினர்.

மேற்காணும் செய்தியை தங்கள் நாளேட்டில் வெளியிட வேண்டுமாய் அன்புடன் கேட்டுக் கொள்கிறோம்.

நன்றி

தங்களன்புள்ள

இரா.சிவக்குமார்
ஊடக ஒருங்கிணைப்பாளர்

புகைப்படக்குறிப்புகள்

D5 P1 மக்கள் தலைவர்களுக்கான மறுமலர்ச்சி முகாம் பற்றிய கருத்தரங்கில் இந்திய சுயஉதவிக்குழு கூட்டமைப்புகளுக்கான பேரிணையத்தின் முதன்மை நிர்வாகி சாந்தி மதுரேசன் பேசுகிறார்.

D5 P2 மக்கள் தலைவர்களுக்கான மறுமலர்ச்சி முகாம் பற்றிய கருத்தரங்கில் நடனமாடும் களஞ்சிய சுயஉதவிக்குழுப் பெண்களின் குழந்தைகள்

D5 P3 வாழ்வாதார மேம்பாட்டிற்கான தொழிற்கல்வி குறித்த கருத்தரங்கில் தமிழ்நாடு பாலிடெக்னிக் கல்லூரியின் முதல்வர் உமையாள் இராமநாதன் உரையாற்றுகிறார்.

D5 P4 வறுமை ஒழிப்பிற்கான அரசின் கொள்கைகள் குறித்த கருத்தரங்கில் முன்னாள் தலைமைத் தேர்தல் ஆணையர் டி.கே.ஒசா உரையாற்றுகிறார்.

D5 P5 வறுமை ஒழிப்பிற்கான அரசின் கொள்கைகள் குறித்த கருத்தரங்கில் பேராசிரியர் பால் அப்பாசாமி உரையாற்றுகிறார்.

D5 P6 மக்கள் தலைவர்களுக்கான மறுமலர்ச்சி முகாம் பற்றிய கருத்தரங்கில் கலந்துரையாடும் பெண் தலைவிகள்